**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண். 6/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயராமன் | மதம் | : இந்து |
| த/பெ | : மாரப்ப நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 65 | கிராமம் | : எட்டியத்தாங்கல் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**01.04.2025**

**<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு 1, 2, 3, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் குழாய்க்காக (pipeline) வழக்கு தாக்கல் செய்துள்ளேன். குறிப்பாக என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நீலகண்டன், துரைசாமி, மோகன், இறந்துபோன ஆஞ்சம்மாள் ஆகியோர் குழாயை எடுக்க சொன்னார்கள். காவல்துறையினர் வந்து எங்களை மிரட்டினார்கள். எனவே இந்த வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு சொத்தின் புல எண், விஸ்தீரணம், நான்கு எல்லைகள் சொல்ல முடியுமா என்றால் புல எண்.13 சி ஆகும். விஸ்தீரணம் தெரியாது. மேற்கே நரசிம்ம நாயுடு, வடக்கே கிருஷ்ணம்ம நாயுடு, தெற்கே நான், கிழக்கே நான் உள்ளேன்.

2. வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் மேற்கே நரசிம்ம நாயுடு, கிழக்கே கிருஷ்ணம்ம நாயுடு **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்)** மேற்கே பிரதிவாதிகள் இருக்கிறார்கள். பிரதிவாதிகள் இடத்தில் தான் குழாய் செல்கிறது. நான் தற்போது சொல்லியுள்ள விவரத்தைதான் எனது வழக்கிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இதை மாற்றி வேறு சொல்லியிருந்தால் அது தவறுதான் என்றால் சரிதான். வழக்கு A, B அட்டவணை சொத்துக்கள் எனது சொத்து என நான் பிராதில் சொல்லியுள்ளதில் அவை என்ன என்ன சொத்து என சொல்ல முடியுமா என்றால் தெரியாது.

3. எனது பிராது பத்தி 3ல் சொல்லியுள்ள A, B அட்டவணை சொத்துக்கள் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் அண்ணன் வீரராகவலு நாயுடு

பெயரில்தான் பத்திரம் வந்தது. எனது பிராது பத்தி 3 ல் சொல்லியுள்ள A, B அட்டவணை சொத்துக்கள் தாவா சொத்து என்று நான் கூறியுள்ளவாறு குறிப்பிட்டு அட்டவணையில் A, B என சொத்துவிவரத்தில் காட்டியுள்ளேனா என்றால் காட்டியுள்ளேன். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள விவரத்தை எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கேட்கவில்லை. நான் இந்த வழக்கில் 5, 6 பிரதிவாதிகளாக காவல் துறையை சேர்த்துள்ளதற்கு காரணம் சொல்ல முடியுமா என்றால் இரவு நேரத்தில் JCB உடன் காவல் துறையினர் வந்தார்கள். நான் தகராறு செய்தேன். வண்டியை நிறுத்திவிட்டு மோகன் ஓடிவிட்டார். அதன்பின்பு காவல்துறையில் சென்று நாங்கள் எடுத்துவிடுவதாக எழுதிகொடுத்துவிட்டு வந்தோம் என்றால் எழுதிகொடுக்கவில்லை. ஆனால் எடுத்துவிடுவதாக சொல்லிவிட்டு வந்தோம். அதன்பின்புதான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் ஆமாம்.

4. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் காவல்துறையினருக்கு அனுப்பினோமா என்றால் இல்லை. எனக்கு சொந்தமான இடத்தில் எத்தனை இடத்தில் ஆழ்துளை கிணறு உள்ளது என்றால் 2 இடத்தில் உள்ளது. என்னால் புல எண்கள் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் 30 சி, 20 சி ஆகும். இரண்டு ஆழ்துளை கிணறுகளுக்கும் நான் மின்இணைப்பு பெற்றுள்ளேன் என்றால் ஆமாம். எந்த வருடம் 2 மின்இணைப்புகளும் வாங்கினேன் என்றால் வருடம் ஞாபகமில்லை. தோராயமாக மின்இணைப்பு பெற்று எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமார் 20 வருடம் இருக்கும். 20 வருடங்களுக்கு முன்புதான் நான் மின்இணைப்பு பெற்றேன் என்பதை காட்ட ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு மின் இணைப்பு கொடுத்ததற்கு என்னிடம் ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் காகிதம் உள்ளது. அந்த காகிதத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய கோரினால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)